# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1074/7 - 1999 අප්‍රේල් 07 වැනි බදාදා - 1999.04.07

1074/7 ஆம் இலக்கம் - 1999 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) — பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி. 7/98

### 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்

38 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்

1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்துக்கான 5 ஆம் பிரிவுடனும் அட்டவணையுடனும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 44(2) ஆம் உறுப்புரையுடனும் சேர்த்து வாசிக்கப்படுவதான அச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க,
சனாதிபதி.

கொழும்பு,
30 மார்ச்சு 1999.

### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள், 1999 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பட்டியலிடப்படாத கம்பனிகள் பற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.
2. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் முறையே 2 ஆம் 3 ஆம் பிரிவுகளின்கீழ் கடைப்பிடிக்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்களும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களும் 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பிணையங்கள் பேரவைச் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற ஒரு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ளதும்,

   (அ) ஆண்டொன்றுக்கு ஐந்து கோடி ரூபாவை விஞ்சுகின்ற மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ளதும் ;

   (ஆ) முன்னைய நிதியாண்டின் இறுதியில் ஒரு கோடி ரூபாவை விஞ்சுகின்ற பங்குதாரர்கள் ஒப்புரவைக் கொண்டுள்ளதும் ;

   (இ) முன்னைய நிதியாண்டின் இறுதியில் மூன்று கோடி ரூபாவை விஞ்சுகின்ற மொத்தச் சொத்துக்களைக் கொண்டுள்ளதும் ;

   (ஈ) முன்னைய நிதியாண்டின் இறுதியில் ஒரு கோடி ரூபாவை விஞ்சுகின்ற பொறுப்புக்களை வங்கிகளுக்கும் ஏனைய நிதி நிறுவனங்களுக்கும் கொண்டுள்ளதும் ;

   (உ) ஐயாயிரம் பேரை விஞ்சுகின்ற பணியாட்டொகுதியினரைக் கொண்டுள்ளதுமான ஒவ்வொரு கம்பனிக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

04-469